ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நாணயத் திணைக்களம் |
| திகதி | 2023.02.02 |

## இலங்கையின் 75ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்தைக் குறிக்கும் முகமாக நாணயக் குற்றியொன்றை இலங்கை மத்திய வெளியிடுகின்றது

இலங்கை மத்திய வங்கியானது 2023.02.04 அன்று இடம்பெறவுள்ள நாட்டின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை குறிக்கும் முகமாக ரூ.1000 நாணய வகை சுற்றோட்டம் செய்யப்படாத ஞாபகார்த்தக் குற்றியொன்றை வெளியிட்டுள்ளது. இது, இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்படும் 71ஆவது ஞாபகார்த்தக் குற்றியாகும். குற்றி பற்றிய விரிவான விபரணங்களும் விபரக்குறிப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| நாணயத்தின் முன்புறம் | நாணயத்தின் பின்புறம் |
|---|---|
|   |   |
| நாணயத்தின் மத்தியில் இலங்கைக் கொடியினை ஏந்திய பிம்பத்துடன் கூடிய பாரிய எழுத்துக்களில் “75” என்ற இலக்கத்தை நாணயக்குற்றியின் முன்பக்கம் காண்பிக்கின்றது. குற்றியின் மேல் விளிப்பு ஓரம் நெடுங்கிலும் “சுதந்திரக் கொண்டாட்டம்” என்ற சொற்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தோன்றுகின்றன. குற்றியின் கீழ் விளிம்பு ஓரம் நெடுங்கிலும் “1948–2023” என்ற ஆண்டுகள் தோன்றுகின்றன. | நாணயக்குற்றியின் பின்பக்கத்தின் மத்தியில் முகப்புப்பெறுமதியான “1000” பெரிய இலக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளதுடன் முகப்பிற்கு சற்றுக் கீழே “ரூபாய்” என்ற சொற்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பொறிக்கப்பட்டுள்ளதுடன் முகப்புப்பெறுமதிக்கு மேல் இலங்கையின் தேசிய இலட்சனை தோன்றுகின்றது. “2023” என்ற ஆண்டு அடிப்பக்கத்தில் காணப்படுகின்றது. குற்றியின் மேல் விளிப்பு ஓரம் நெடுங்கிலும் “இலங்கை” என்ற சொற்கள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தோன்றுகின்றன. |

| விபரங்களும் விபரக்குறிப்புகளும் | | | |
|---|---|---|---|
| **குற்றியிலுள்ள ஆண்டு** | 2023 | **வழங்கல்** | 2,500 குற்றிகள் |
| **உலோகம்** | செப்பு – நிக்கல் | **வடிவம்** | வட்டம் |
| **குற்றியின் வகை** | சுற்றோட்டம் செய்யப்படாதது ஞாபகார்த்தம் | **மெருகூட்டல்** | வர்ணத்துடன் கூடிய கறைபடியாத விதத்தில் பாதுகாக்கப்பட்டது |
| **விட்டம்** | 38.61 மிமீ | **நிறை** | 28.28 கிறாம் |

முதலாவது ஞாபகார்த்தக் குற்றி இன்று கண்டியில் அமைந்துள்ள சனாதிபதி மாளிகையில் வைத்து மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர்.பி.நந்தலால் வீரசிங்க அவர்களினால் இலங்கையின் சனாதிபதி கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டது.



இந்நாணயக்குற்றி உறுதிச்சான்றிதழுடன் கவர்ச்சிகரமான அன்பளிப்புப் பெட்டியில் வழங்கப்படும். மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான குற்றிகள் 2023 மாச்சிலிருந்து கொள்வனவுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன் பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிசாலை, சென்றல் பொயின்ட் கட்டடம், இல. 54 சதம் வீதி, கொழும்பு 01 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் விற்பனைக் கருமபீடம் மற்றும் அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, திருகோணமலை, கிளிநொச்சி மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்கள் என்பன ஊடாக விற்பனைசெய்யப்படும். இக்குற்றியின் விற்பனை விலையும் விற்பனைக்காக கிடைக்கும் திகதியும் காலக்கிரமத்தில் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

| மேலதிகத் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்: | தொலைபேசி | தொலைநகல் | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| நாணயத் திணைக்களம் | +94 11 247 7587 | +94 11 247 7726 | currency@cbsl.lk |
| பொருளாதார வரலாற்று அரும்பொருட்காட்சிசாலை | +94 11 438 7405<br>+94 11 244 4503 | - | - |
| பிரதேச அலுவலகங்கள்: | | | |
| அநுராதபுரம் | +94 25 222 2024 | +94 25 222 5689 | roapura@cbsl.lk |
| மாத்தளை | +94 66 222 2167 | +94 66 222 2175 | romatale@cbsl.lk |
| மாத்தறை | +94 41 222 2269 | +94 41 222 2719 | romatara@cbsl.lk |
| திருகோணமலை | +94 26 222 6965 | +94 26 222 6967 | po-ep@cbsl.lk |
| கிளிநொச்சி | +94 21 228 5914 | +94 21 228 5911 | rokn@cbsl.lk |
| நுவரெலியா | +94 52 223 5439 | +94 52 222 4294 | rone@cbsl.lk |

நாணயக் கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01